பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

கடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 01 திங்கட்கிழமை (18-09-1995) UTHAYAN A Lively National Tamil Daily சுதிர் 298

மாநகராட்சி மன்ற ... 18-9-1995

# 18 வயதிலும் கூடிய இளைஞருக்கு கட்டாய இராணுவ சேவைப்பயிற்சி!

## அரசு ஆலோசிப்பதாக சந்திரிகா அறிவிப்பு

கொழும்பு, செப்ரெம்பர். 18

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் அனைவருக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி அளிக்க வேண்டும் என்ற திட்டத்தை செயற்படுத்துவது குறித்து ஸ்ரீலங்கா அரசு சிந்தித்து வருவதாக அதன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்திருக்கிறார்.

வடக்கு - கிழக்கு மோதல் தொடருமானால், அரசின் யுத்த நடவடிக்கைகளை வலுப்படுத்த கட்டாய இராணுவப் பயிற்சித் திட்டத்தைச் செயற்படுத்துவது அவசியம் என்றும் சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருக்கிறார்.

இப்பேட்டியின் மேலதிக விபரங்கள் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை. (உ-க-3)

## பலாலியிலிருந்து நேற்றும் விடாது ஷெல் தாக்குதல்!

யாழ்ப்பாணம், செப். 18

தொடர்ந்து ஆறாவது நாளாக பலாலி படைமுகாம் பகுதியிலிருந்து நேற்றும் வலிகாமம் கிழக்கு மற்றும் வலிகாமம் வடக்குப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

அச்சுவேலி, புத்தூர் மேற்கு, வல்லை, பத்தமேனி, ஆவரங்கால், நிலாவரை, புன்னாலைக்கட்டுவன் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இப்பகுதிகளில் இருந்தும் உடுவில், மருதனார்மடம் பகுதிகளில் இருந்தும் நேற்றும் மக்கள் இடம்பெயர்ந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலிப் பகுதியில் ஷெல்லினால் 2 பேர் காயம்

பலாலி முகாம் பகுதியிலிருந்து நேற்று நண்பகல் வேளை நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலுக்கு அச்சுவேலியில் இருவர் படுகாயமடைந்தனர்.

அச்சுவேலி மேற்கில் தம்பிப்பிள்ளை ஆச்சிப்பிள்ளை (வயது 40) என்பவரும் — அச்சுவேலி மத்திய மகா வித்தியாலயப் பகுதியில் பொன்னுத்துரை ரவிச்சந்திரன் (வயது 22) என்பவரும் படுகாயமடைந்தனர்.

இவர்கள் இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-13)

## மல்லாகம் பகுதியில் ஒருவர் சினைப்பரால் படுகாயம்

யாழ்ப்பாணம், செப். 18

நேற்றுக்காலை 9 மணியளவில் மல்லாகத்தில் உள்ள தனது வீட்டைப் பார்க்கச் சென்ற ஒருவர் படையினரின் சினைப்பர் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

மல்லாகத்தைச் சேர்ந்தவரும் தற்போது இடம்பெயர்ந்து சிறுப்பிட்டியில் வசித்து வருபவருமான கனகர் நாகராசா (வயது 56) என்பவரே இவ்வாறு படுகாயமுற்றவராவார். இவர் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-13)

## ஆனையிறவில் சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம், செப். 18

ஆனையிறவுப் பகுதியில் ஸ்ரீலங்கா படையினர் மீது நேற்று முன்தினம் காலை விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் இராணுவ சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், ஒருவர் படுகாயமடைந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-8)

## கிழக்கில் குண்டுவெடிப்பு

யாழ்ப்பாணம், செப். 18

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் நேற்று குண்டு ஒன்று வெடித்ததில் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

## "ஹபரண" [illegible] இன்று வரும்

யாழ்ப்பாணம், செப். 18

திருகோணமலையில் இருந்து இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும் 'ஹபரண' கப்பலில் யாழ். மாவட்ட ஆஸ்பத்திரிகளுக்கு தேவையான ஒரு தொகுதி மருந்து எடுத்துவரப்படவிருக்கிறது.

இக்கப்பலில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் அதிகாரிகள் உட்பட பல சர்வதேச அமைப்புக்களின் அதிகாரிகளும் வருகிறார்கள்.

இருதினங்கள் இங்கு தங்கி நிற்கும் 'ஹபரண' கப்பல் மூலம் தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கும் — 'ஐரிஷ்மோனா' கப்பலின் — பயணிகள் தீவுப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## நாடாளுமன்ற கட்டடத்திற்கு தீவிர பாதுகாப்பு

நாடாளுமன்றக் கட்டடத்தைத் தகர்க்க விடுதலைப் புலிகள் முயற்சிக்கிறார்கள் என்று கிடைத்த தகவலை அடுத்து கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தன புரத்தில் உள்ள நாடாளுமன்றக் கட்டடத்தில் என்றும் இல்லாதவாறு பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

## வன்னியிலும் மிக சிறப்பாக திலீபன் அஞ்சலிநிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 18

தியாகி திலீபனின் எட்டாம் ஆண்டு நினைவு நிகழ்வுகளின் மூன்றாம் நாளான நேற்று மக்கள் சிறப்பான முறையில் அஞ்சலி செலுத்தினர்.

குடா நாட்டில் கோட்ட மட்டத்தில் அமைக்கப்பட்ட பிரதான பந்தல்களில் ஆயிரக்கணக்கான மக்கள் உண்ணா விரதம் அனுஷ்டித்தனர்.

பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் மிகப் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் நேற்றைய உண்ணாவிரதங்களில் பங்குபற்றியதாக எமது செய்தியாளர்கள் அறிவிக்கிறார்கள்.

சனசமூக நிலையங்கள், நூல் நிலையங்கள், மற்றும் பொது இடங்களிலும், சந்திகளிலும்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. டாக்டர்கள் மூவர் வடபகுதியில் பணிபுரிவர்!

யாழ்ப்பாணம், செப். 18

வடக்கில் உள்ள ஆஸ்பத்திரிகளில் நிலவும் வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறையை அடுத்து —

ஐ. நாவின் அனுசரணையுடன் மூன்று டாக்டர்கள் விரைவில் பணிபுரிய உள்ளனர்.

ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் மேற்கொண்ட ஆய்வையடுத்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்கு மூன்று டாக்டர்களை நியமிக்க ஐ. நா. அங்கீகாரம் அளித்திருந்தது.

இந்த டாக்டர்கள் [illegible] பகுதிகளில் கடமையாற்ற வசதியாக அவர்கள் நேரடி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கிற்கான மாவுடன் 'ஹெந்தல' கொழும்புக்கு?

### யாழ். செயலகத்தின் கப்பல் இது!

யாழ்ப்பாணம், செப். 18

யாழ். மாவட்டத்துக்கு மா ஏற்றி வருவதற்காக திருகோணமலைக்குச் சென்ற "ஹெந்தல" கப்பல் குறித்து முரண்பாடான தகவல்கள் யாழ். செயலகத்துக்கு கிடைத்துள்ளதாகத் தெரியவந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறையில் மாவை இறக்கி முடித்துவிட்டு மீண்டும் மா எடுத்து வருவதற்காக இக்கப்பல் திருகோணமலைக்குச் சென்றிருந்தது.

மாவை ஏற்றிக் கொண்டு இக்கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வந்துசேரும் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்த போதும் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

பொருள் ஏற்றி வருவதற்கு

## யாழ். செயலகம் வழங்கிய வசதிகள் குறித்து அதிருப்தி

### திணைக்களங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 18

யாழ். செயலகம் உரிய வசதிகளை அளிக்காத காரணத்தால் யாழ். மாவட்டத்தில் உள்ள திணைக்களங்களுக்கு தேவையான பொருள்களை எடுத்து வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அத்திணைக்களங்களின் அதிகாரிகள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள திணைக்களங்கள் தமது தேவைகளுக்கான பொருள்களை முன்னர் தமது பிரதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் அனைவரும் எழுச்சியடைவார்களாயின் தமிழீழம் உருவாகுவதை யாராலும் தடுக்க முடியாது.

– தியாகி திலீபன் –

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

(வி/2273)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/ அத்தியார் இந்துக் கல்லூரி நீர்வேலி
மாணவ மன்றங்களின் வளர்ச்சி நிதிக்கான

**அதிர்ஸ்ட இலாபச் சீட்டு**
**அதிர்ஸ்ட இலக்கங்கள்**

1 ஆம் பரிசு இல:- 4879
2 ஆம் பரிசு இல:- 2029
3 ஆம் பரிசு இல!- 4584

ஆறுதல் பரிசுகள் பத்து

| | |
|---|---|
| 1. 4174 | 6. 4357 |
| 2. 3362 | 7. 4666 |
| 3. 2010 | 8. 4459 |
| 4. 2930 | 9. 2638 |
| 5. 2386 | 10. 2782 |

குறிப்பு:- 20-9-95 இற்கு முன்பு அதிர்ஸ்டசாலிகள் தங்களை அத்தியார் இந்துக்கல்லூரி அதிபரிடம் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

— அதிபர்

(38582)


# ராணுவத்துக்கு ஆயுத விநியோகம்: பத்திரிகை உரிமையாளரும் சம்பந்தம்

## "ராவய" கூறுகிறது

"த ஐலண்ட்" திவயின பத்திரிகைகளை வெளியிடும் உபாலி பத்திரிகை நிறுவனத்தின் உரிமையாளராகச் செயற்படும் டாக்டர் சீவலி ரத்வத்த மற்றும் திருமதி லக்மிணி விஜேவர்த்தன உட்பட ஐந்து பணிப்பாளர்களைக் கொண்ட ஏசியன் இன்ரநாஷனல் பற்றியும் —

அந்த நிறுவனத்தின் வெளிநாட்டு முகவர் நிறுவனமான இங்கிலாந்தைச் சேர்ந்த எல். பி. ஏ. நிறுவனம் பற்றியும் அந் நிறுவனத்தினால் இராணுவத்திற்கு விநியோகிக்கப்பட்ட ஆயுதங்கள் பற்றியும் தகவல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளதாக "ராவய" பத்திரிகை தெரிவிக்கிறது.

இந்த நிறுவனத்தினால் பல கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்றும் —

விநியோகிக்கப்பட்ட பொருள்களில் றைபிள்கள், பவள்கள், நிலக்கண்ணிகள், கைக்குண்டுகள் கிறனேட், லோஞ்சர்கள், கிறனேட் றைபிள்கள் மோட்டர்கள் ஆகியன அடங்கியுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(மற்றொரு செய்தி 6 ஆம் பக்கத்தில்)

# வடக்கில் படையினர் நடந்துகொண்ட முறையால் மனம் ஒடிந்த நிலையில் தெற்கே திரும்பியவர் நான் என்கிறார் தேரர்

கொழும்பு, செப். 18

எனது பாதுகாப்புக்காக அரசு அனுப்பிய படையினர் தமிழ் மக்களோடு நடந்து கொண்ட முறையற்ற செயல்களினாலேயே நான் வடபகுதியில் இருந்து மனம் ஒடிந்த நிலையில் தெற்கு திரும்ப வேண்டி வந்தது.

இவ்வாறு தெரிவித்தார் காங்கேசன்துறை விகாராதிபதி வண. தெல்கல்லே பதும சிறி தேரர்.

அண்மையில், கொழும்பு பௌத்தலோக மாவத்தை, கித்து செவன மண்டபத்தில் நடைபெற்ற, "அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளும் பெரும்பான்மை, சிறுபான்மையினர் அபிப்பிராயமும்" எனும் பொருளில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் முக்கிய உரையாற்றினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நான் காங்கேசன்துறையில் தமிழர்களோடு மிக நெருக்கமாகப் பழகியவன் அங்கு திஸ்ஸ விகாரையை கட்டும் போது, தமிழர்கள் தான் எனக்குப் பெருமளவு உதவினார்கள்.

இனக்கலவரங்கள் நடைபெற்ற போது நான் காங்கேசன்துறையிலேயே இருந்தேன் தமிழர்கள் எனக்கு எவ்வித பிரச்சினையும் தரவில்லை.

நான் அங்கிருந்து வருவதற்குக் காரணம், நான் தேவையில்லை எனக் கூறியும், கடந்த அரசு எனது பாதுகாப்புக்கென அனுப்பிய படையினர் தமிழர்களுக்குச் செய்த அட்டூழியங்களே.

அங்கிருந்து வந்தபின் இன்று வரை நான் மனம் ஒடிந்த நிலையிலேயே உள்ளேன்.

நான் மீண்டும் அங்கு செல்வேன். தமிழர்களோடு இணைந்து வாழ்வேன் புத்த பிக்குகளை தமிழர்களுக்கு எதிராக நடக்கத் தூண்டுவது அரசியல்வாதிகளே.

அதிகாரப் பகிர்வின் மூலமே நாம் ஒன்றுபட்டு ஒற்றுமையாக வாழ முடியும் என்றார்.

கருத்தரங்கில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல வேறு தரங்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

(ஒ-ஏ)

## வீடமைப்பு கடன்

வலிகாமம் தெற்கு, செப். 18

மக்களின் இன்றைய நிலை கருதி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினர் வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழ் 20 ஆயிரம் ரூபா வரை கடன் வழங்கும் திட்டத்தை அமுல்படுத்தி வருகின்றனர்.

இக்கடன் தொகையை பெறுவதற்கு கிராமப் புறங்களில் இருந்து விண்ணப்பம் செய்பவர்கள் தமது மாத வருமானமாக 700 ரூபாவிலிருந்து 4 ஆயிரத்து 500 ரூபா வரை பெறுபவர்களாகவும் —

நகரப்புறங்களில் உள்ளவர்களாயின் ஆயிரம் ரூபாவில் இருந்து 5 ஆயிரம் ரூபா வரை மாத வருமானமாகப் பெறுபவர்களாகவும் இருக்க வேண்டும் எனவும் —

கடனை பெற்றுக் கொள்வதற்கு நிரந்தர மாத வருமானமாக 2 ஆயிரம் ரூபா பெறும் அரசாங்க, திணைக்கள ஊழியர் ஒருவர் பிணை நிற்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (க-152)


JAFFNA COLLEGE
INSTITUTE OF
TECHNOLOGY
VADDUKODDAI

## VACANCIES

Applications are invited from suitably qualified candidates for the following Posts.

**1. Librarian**
Qualification:
A University Degree with Intermediate in Librarianship.
Salary: 2905 — 4750 + Allowances
7x65 10x100 3x130

**2. Library Assistant**
Qualification:
G. C. E. (A/L) with pass in First Examination in Library Science and one (01) year experience in Library service. Preference will be given to those with Short-Hand / Typing experience.

**3. Instructor in (COMPUTER) Visiting**
Qualification:
Pass NCE Diploma or J.C.I.T. Diploma with class or N.I.B.M. Diploma with class in Computer Studies. Preference will be given to them with teaching experience.
Salary: In accordance with the Institute scale.

Apply with full Bio-Data to the

Director,
Jaffna College,
Institute of Technology,
Vaddukoddai.

On or before the 26th September 1995.

(C-2263)



## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 05 — 10 — 1974

உதிர்வு: 19 — 08 — 1995

**கனகசபாபதி கணேசபரன்**
(பரன்)

கனிவான முகம் காணவில்லை - பரனே
உந்தன் நயமான மொழி கேட்கவில்லை
எழிலான முகம்காணா நீயும்
எமைவிட்டுப் பிரிந்ததுமேனோ?
கிட்டவே இருந்தாய் நண்பா – நீயும்
எட்டவே சென்று மறைந்தாய்!
இனிதான உனதன்புகாண-இங்கு
எல்லோரும் ஏங்குகின்றோம்!
உடலாலே எமை நீ பிரிந்தாய் - இருந்தும்
எம் உள்ளத்தில் என்றென்றும் வாழ்வாய்!

நண்பர்கள்.

சுழிபுரம்,
பறாளாய்.

(38580)


## முகிலின் குரல் வானொலியில்

### திங்கள் இரவு 18 – 09 – 1995

★ 8-02 — தியாகி லெப். கேணல்திலீபனின் 8ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — நல்லூர் ஈழதாசன் குழுவினர் தயாரித்து வழங்கும் "தியாகதீபம்" வில்லிசையின் இறுதிப் பகுதி
★ 8-20 — சமகாலப் பார்வை
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தரிசனம் — பழம்பெரும் நாடகக் கலைஞர் திரு. வீரசிங்கத்துடனான செவ்வி

### செவ்வாய் காலை 19 - 09 - 1995

★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 — இன்றைய தாரகை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள் தொடர்ந்து தாயகப் பாடல்கள்

## தமிழீழ வானொலியில்

### செவ்வாய் மாலை

★ 5-01 — சிந்தனைச்சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — ஆழியமுதம்
★ 5-30 — மாணவர் பக்கம் — நிகழ்ச்சியில் இளவாலை திருக்குடும்ப கன்னியர்மடம் பங்கு பற்றும்
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 — என் தெரிவு
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — நேயர் விருப்பம்


## வணிகப் புள்ளிவிபரவியல் (A/L - 1997)

தொடர் விரிவுரைகள்:

**செல்லையா இளங்குமரன்**
(B.Sc. [Hons]- புள்ளிவிபரவியல், M.Sc. புள்ளிவிபரவியல்)
விரிவுரையாளர் (புள்ளிவிபரவியல்)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆகக்குறைந்தது 30 வணிக மாணவர்களைக் கொண்ட தொகுதியினர் ஒழுங்குபடுத்தலாம். தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**பட்டப்படிப்புகள் கல்லூரி**
யாழ்ப்பாணம்

தனியான மாணவர்கள் இக்கல்லூரியின் தொடர் விரிவுரைத் தொகுதியில் பதிவுசெய்து கொள்ளலாம்.

[சி/2293]



## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன்
அ. அரவிந்தனின் தந்தையார்
**வடிவேலு அம்பிகைதாசன்**

அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைகின்றோம். அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

யாழ். இந்துக் கல்லூரி
உயர்தரம் 95 மாணவர்களும்
நண்பர்களும்

(38585)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் பிரதேசங்களில் அரசுக்கு அதிகாரம் இல்லை; அது பலவீனமே!

### பிரதி அமைச்சர் விஸ்வ வர்ணபாலா சொல்கிறார்

கொழும்பு, செப். 18

நவீன அரசியல் விஞ்ஞானத்தின்படி ஸ்ரீலங்கா ஒரு பலவீனமான அரசு இதனை ஒப்புக்கொள்ள வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளின் வசமுள்ள பிரதேசங்களில் நிர்வாக அதிகாரங்களை அரசு செலுத்தமுடியாமல் இருப்பதாலேயே நான் இப்படிக் கூறுகின்றேன்.''

பிரதி கல்வி, உயர் கல்வி அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால இவ்வாறு கூறினார்.

''வெண்தாமரை'' இயக்கத்தின் நோக்கங்கள் பற்றி அண்மையில் பன்னல சமூக மண்டபத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இதைக் கூறினார்.

பலவீனமான அரசு ஒன்றின் உள் மோதல்கள், நெருக்கடி, பிளவு ஆகியன அடிக்கடி அரசு இயந்திரத்தைக் குழப்பியடிக்கின்றன

அரசு இயந்திரத்தை சுமூகமாக நடத்துவதற்கு ஒரே வழி அதிகாரப் பரவலாக்கல் ஆகும். இதனால் நாட்டின் இறைமையும் ஒருமைப்பாடும் பாதிக்கப்பட மாட்டா.

1983 'கறுப்பு ஜூலை'யின் போது தமிழ் அகதிகளை யாழ்ப்பாணத்துக்கு ஏற்றிச் சென்ற நிகழ்ச்சிதமிழர் பாரம்பரியத் தாயகத்தை அங்கீகரித்த மறைமுகமான சம்பவம் ஆகும்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின்படி நாடு ஏற்கனவே அரை குறையான சமஷ்டி அமைப்பை ஏற்றுக் கொண்டுள்ளதை எவரும் மறக்க முடியுமா என்று வினா எழுப்பி பேராசிரியர் வர்ணபால சவால் விடுத்தார்.

(ஓ-க)

### பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்க

# யாழ். செயலகம் கேட்டது ரூ. 7கோடி; கிடைத்தது ரூ. 70லட்சம் மட்டுமே!

யாழ்ப்பாணம், செப். 18

யாழ். மாவட்டத்தில்இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க 7கோடி 4 லட்சம் ரூபாவை யாழ். செயலகம் அரசிடம் கோரியிருந்தது.

ஆனால் கிடைத்ததோ 70 லட்சம் ரூபா மட்டுமே!

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளின் போது கொல்லப்பட்ட, ஊனமடைந்த 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பத்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்கவே 7 கோடி 4 லட்சம் ரூபாவை தருமாறு யாழ். அரச அதிபர் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அதிகாரிகளைக் கேட்டிருந்தார்.

அரசுக்கு ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியைக் காரணம் காட்டி 70 லட்சம் ரூபாவை மட்டும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு தற்பொழுது வழங்கியுள்ளது. (ஓ-3)

# சத்திரசிகிச்சை பற்றிய பயத்தினால் 6பேர் பார்வை இழக்கும் அபாயநிலை

### பச்சிலைப்பள்ளி கண்சிகிச்சை முகாமில் தெரியவந்தது

தென்மராட்சி, செப் 18

சத்திரசிகிச்சை பற்றிய பயத்தினாலும் இது பற்றிய போதிய அறிவின்மையாலும் பச்சிலைப் பள்ளியைச் சேர்ந்த 6 பேர் தமது பார்வையை இழக்கும் அபாய நிலையை அடைந்துள்ளனர்.

அண்மையில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் பச்சிலைப் பள்ளிப் பகுதியில் டாக்டர் ஏ. யோகராசா, டாக்டர், (செல்வி) ம. சரவணமுத்து ஆகியோரின் உதவியுடன் நடத்திய கண் சிகிச்சை முகாமில்இந்த அபாய நிலை கண்டறியப்பட்டது.

மேற்படி 6பேரும் உரிய நேரத்தில் கண்சத்திர சிகிச்சையை மேற்கொள்ளாததால் தற்போது சத்திரசிகிச்சையை மேற்கொண்டாலும் தமது பார்வையை மீண்டும் பெற முடியாத நிலையை அடைந்துள்ளனர்.

அதே போன்றே புலோப்பளையைச் சேர்ந்த 14வயதுச் சிறுமி ஒருவருக்கு இரண்டு வருடங்களின் முன்னரே கண்ணில் பூப்படலம் (கற்ரக்ட்) தோன்றி கண்பார்வை குறையத் தொடங்கியது.

தற்போது பூப்படலம் விரிவடைந்து கண்ணில் பார்வைப் புலம் மிகவும் குறைவடைந்துள்ளது.

இவர் உரியநேரத்தில் சிகிச்சை பெற்றிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது.

அதே போன்று [illegible] யின் தந்தைக்கும் [illegible] பூப்படலம் தோன்றி, அவரது கண் பார்வை பாதிப்புற்றுள்ளது.

தற்போது சிறுமியை யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெறவும் அவரது தந்தையை சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தவும் டாக்டரால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி கண்சிகிச்சை முகாமில் பெண்கள், மாணவர்கள் உட்பட 874பேருக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டது.

இவர்கள் 70 பேருக்கு கண்ணில் பூப்படலம் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

[ஓ-எ-117]

# யாழ். பாடசாலைகளின் அபிவிருத்திக்கு ரூ. 65லட்சம்

### நிதி வந்து சேர்ந்தது

மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சினால் சர்வதேச அபிவிருத்தி நிதியத்தின் கீழ் இவ்வருடம் யாழ். மாவட்ட பாடசாலைகளின் அபிவிருத்திக்கென 6 5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் இதற்கான நிதி யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது

யாழ். கல்வித் திணைக்களத்தினால் 19 பாடசாலைகளுக்கு இந்நிதி பங்கிட்டு வழங்கப்பட்டுள்ளது. தற்போது இப்பாடசாலைகளில் வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது. (ஓ-4)

## நாளை நடக்கும் நினைவுபேருரை

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி சைவமங்கையர் சபையின் ஆதரவில் யாழ். பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்துள்ள லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

பல்கலைக்கழக மெய்யியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி டாக்டர் என். ஞானகுமாரன் பேருரையை நிகழ்த்துவார். (எ)

# வேம்படி மகளிருக்கு ரூ. 3 லட்சத்து 80 ஆயிரம்

### எரிந்த வகுப்பறைகளைத் திருத்த

யாழ்ப்பாணம், செப். 18

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் கடந்தமாதம் திடீரென ஏற்பட்ட தீயினால் எரிந்து நாசமான வகுப்பறைகளை புனரமைப்பதற்காக மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சினால் 3 லட்சத்து 80 ஆயிரம் ரூபா நிதி கல்லூரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தீயினால் 8வகுப்பறைகளும் அந்த வகுப்பறைகளில்இருந்த தளபாடங்களும் முற்றாக எரிந்து நாசமாகியிருந்தன என்பது தெரிந்ததே.

## அடையாள அட்டைகள் அனுப்பப்பட்டன

யாழ்ப்பாணம், செப். 18

ஹெந்தல கப்பலில் எடுத்து வரப்பட்ட சுமார் 1,500 தேசிய அடையாள அட்டைகள் யாழ். செயலகத்தில் இருந்து சகல பிரதேச செயலகங்களுக்கும் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (எ-15)

# குடியிருப்பாளர் விவரம் மட்டுநகரில் சேகரிப்பு

மட்டக்களப்பு, செப். 18

மட்டக்களப்பு நகரில் பொலிஸார் கிராம உத்தியோகத்தர்களுடன் இணைந்து வீடுவீடாகச் சென்று குடியிருப்பாளர்கள் பற்றிய விவரங்களைச் சேகரித்து வருகின்றனர்.

இது தொடர்பாக விசேட விண்ணப்பப்படிவங்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

குறித்த வீட்டில் வதியும் குடும்ப உறுப்பினர் அல்லாதோர் விவரங்கள், வதியும் காரணம், அத்துடன் வீட்டிற்கு அடிக்கடி வரும் விவரங்களும் விண்ணப்பப்படிவத்தில் கேட்கப்பட்டுள்ளன.

உரிய படிவங்களின் பெயர் குறிப்பிடாது எவரும் சோதனை நடவடிக்கைகளின் போது வீட்டில் இருக்கக் காணப்பட்டால், அவசரகாலச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஓ)

# மட்டு நகரில் படையினர் சுற்றிவளைத்து தேடுதல்

### பதியாதோர் மீது தீவிர விசாரணை

மட்டக்களப்பு, செப். 18

மட்டக்களப்பு நகரில் கடந்த சில நாள்களாக பகுதி பகுதியாக சுற்றிவளைப்பு தேடுதல்கள் நடைபெற்று வருகின்றன.

கடந்த திங்கட்கிழமை மாலை முதலியார் வீதி, அதிசார் வீதி, கல்லடித்தெரு போன்ற வீதிகள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக பொலிஸ் நிலையத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலின் பிரகாரம் ஒவ்வொரு வீடுகளிலும் தங்கியிருந்தவர்கள் விசாரிக்கப்பட்டனர். பதிவு செய்யாது தங்கியிருந்தோர் தனியாகப் பிரிக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டனர். (ஓ)

# பீரிஸ் வந்த விமானத்தில் பயணிகள் மீது சோதனை!

கொழும்பு, செப். 18

நீதி அரசமைப்பு விவகார பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் அண்மையில் சிங்கப்பூரில் இருந்து விமானம் மூலம் கொழும்பு திரும்பினார்.

அப்போது அவர் பயணம் செய்த ''எயர்லங்கா'' விமானத்தில் இருந்த பயணிகள் அனைவரும் சிங்கப்பூர் விமான நிலையத்தில் வைத்து கடுமையாகச் சோதனையிடப்பட்டனர்.

தாம் இரண்டு தடவைகள் உடல் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக பயணிகள் தெரிவித்தனர்.

சில பயணிகளின் பொதிகள் கொழும்பில் திருப்பித் தருவதாகக் கூறி அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்[illegible] என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-[illegible])

### வலயம் 2 இன் ஆசிரியர்கள்

# தற்காலிக இடமாற்றம் கோரி விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், செப் 18

அண்மைக்கால இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்துள்ள வலயம் இரண்டைச் சேர்ந்த ஆசிரியர்கள், கிளிநொச்சி, வன்னி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்குத் தற்காலிக இடமாற்றம் கோரி விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு தற்காலிக இடமாற்றம் கோரும் ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் சிபார்சு செய்யப்பட்டு கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும்என்று வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமி தெரிவித்தார். (எ-4)

# அதிகாரப் பரவலாக்கலை ஐ.தே.க. எதிர்க்கவில்லை

### அக்கட்சியின் எம். பி. கூறுகிறார்

கொழும்பு செப். 18

அதிகாரப் பரவலாக்கலை ஐக்கிய தேசியக்கட்சி எதிர்க்கவில்லை—இவ்வாறு ஐ. தே. க. வின் சிரேஷ்ட உறுப்பினரும், களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் நீண்ட கால வரலாற்றில், அதிகாரப் பரவலாக்கல் கருத்தை எப்போதுமே கடைப்பிடித்து வந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார, சமூக, அரசியல் முறையைச் சீர்குலைக்கக் கூடியவிதத்தில் அரசியல்தீர்வுயோசனைகளை எதிர்க்கும் நடவடிக்கைகளில் நாங்கள் கலந்து கொள்ளப் போவதில்லை என்றும் திரு. சமரசிங்க குறிப்பிட்டார். (ஓ-க-எ)

# அரசின் தீர்வு யோசனைக்கு தொழிற்சங்கங்கள் ஆதரவு

கொழும்பு, செப். 18

அரசின் தீர்வுத் திட்ட யோசனைகளை, இருபத்திரண்டு தொழிற்சங்கங்கள் வரவேற்றுள்ளன.

தீர்வுத் திட்ட யோசனைகள் துணிச்சலையும், நேர்மையையும் எடுத்துக் காட்டுவதாகவும் அவை தெரிவித்தன.

தொழிலாளர்கள், வகுப்பு வாதத்திற்கு உட்பட்டுவிடாமல், தேசிய, சர்வதேச யதார்த்தங்களுக்கு ஏற்ப இந்த யோசனைகளை புத்தி சிரத்தையுடன் பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் அந்த தொழிற்சங்கங்கள் வேண்டுகோள்விடுத்துள்ளன. (ஐ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தனி வெள்ளை, பிறவுண், வெள்ளை - பிறவுண், கலந்த, ஆண் - பெண் 2½ மாதம் நிரம்பிய பூச்சி நீக்கிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு, முகவரி 110/15, சட்டநாதர் கோயில், பின்வீதி, நல்லூர். (38571)

நல்ல நிலையில் உள்ள 'சிங்கர்' தையல் இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு ச. தம்பிமுத்து. 'முத்தகம்', மத்தியவீதி, மீசாலை கிழக்கு, மீசாலை. (38575)

3 போத்தல் பால் எடுக்கக் கூடிய சணல் ஆடு, பால் எடுக்கக்கூடியநிலையில் 8மாத சணல் கடாக்குட்டியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 117, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (38570)

## விற்பனையாகிறது

புதிய பாடத்திட்டத்திற்கு அமைய ஒத்தகருத்து சொற்களும், எதிர்கருத்து சொற்களும் ஆண்டு 5, 6, 7, 8, 9, 10, 11 4000 சொற்கள் அடங்கியது. தொகுப்பு: வே. நவமோகன். விற்பனை: பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-2235)

## புலமைப் பரிசில் பரீட்சை

புதிய பாடத்திட்டத்திற்குரிய வழிகாட்டி ''பொது விவேகம்'' 97/-. வினாத்தாள்கள் I, II சேர்ந்தது. வெளியீடு: அஸ்ரன் பதிப்[illegible] எல்லாப் புத்தகசாலை[illegible]லும் பெற்றுக்கொள்ள[illegible]ம். 18% கழிவுடன் [illegible]மொத்தமாகப் பெற யாழ்ப்[illegible]பாணப் புத்தக நிலையம், [illegible]48, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். [சி-2211]

## காணவில்லை

02-09-95 இரவு அ. ம. குறியிட்ட வெள்ளைப் பசு மாடும், R. M. குறியிட்ட வெள்ளை வால் கொண்ட கறுப்புப் பசுமாடும் களவு போய்விட்டன. கண்டவர்கள் ஆழ்வார்மார்க்கண்டு, போதராமடம், துன்னாலை வடக்கு, கரவெட்டி. எனும் முகவரிக்கு தகவல் தரவும் சன்மானம் வழங்கப்படும். (38572)

## தேவை

பியானோ தேவை. விற்க விரும்புவோர் நேரிலோ, கடித மூலமோ தொடர்பு கொள்ளவும். நிரோஜன், 29/53, கோவில் வீதி, யாழ்ப்பாணம். [38559]


வெற்று ஜாம் போத்தல்களும், தரமான விளாம்பழங்களும் தேவை. உடுவில் வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள றோஸ்பிராண்ட் இனிப்பு உற்பத்தி நிலையத்தில் கொள்வனவு செய்யப்படும். (சி-2268)

நடைபெற்ற
**A/L 95** பரீட்சை
CHEMISTRY PHYSICS
BOTANY ZOOLOGY
பாடங்களுக்கான
விடைகள் எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்.
**BOND**
யாழ்ப்பாணம்.
[8741]

ஆண்டு – 5
புலமைப் பரிசில்
+
பாடசாலை அனுமதி பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் [விடைகளுடன்]
ஒவ்வொரு ஞாயிறு
வெளியிடப்படும்
அடுத்த வெளியீடு:
17 - 09 - 95 ஞாயிறு
**BOND**
யாழ்ப்பாணம்.
(சி-8743)

மாதாந்த பயிற்சி
வினாத்தாள்கள்-
விடைகளுடன்
ஆண்டு 3,4,5,6,7,8
எல்லாப் பாடங்களுக்கும் செப்ரெம்பர் - மாத வெளியீடு
18 — 09 — 1995
வெளிவரும்
**BOND**
யாழ்ப்பாணம்.
(8742)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 08 — 12 — 1941 | 13 — 09 — 1990 |

### அமரர் கந்தையா கோபாலபிள்ளை
J.P
(கோபால் அன்சன்ஸ் உரிமையாளர்)

திதி: 18 - 09 – 1995

பாரினில் அன்புடனும் பண்புடனும்
வலம் வந்த எனது அருமை துணைவரே!
எமக்கு வளமான வாழ்வளித்து
ஒளியூட்டி இதம் தந்த அப்பாவே!
உங்களை இன்நாளில் நினைவு கூரும்.

அன்பு மனைவி, மக்கள்.

51 கண்டி றோட்,
கச்சேரி,
யாழ்ப்பாணம். [38579]

நகரசபை சாவகச்சேரி
## உழவு இயந்திர 1995ஆம் ஆண்டிற்கான
## கேள்வி அறிவித்தல்

01-10-95 — 31-12-95 வரையிலான காலப்பகுதிக்கு கீழ்க்குறிப்பிடப்படும் சேவைக்கான கேள்விகள் இரு பிரதிகளில் 25-10-95ஆம் திகதிக்கு முன்பு 10-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| சேவைகள் | கேள்வி வைப்பு ரூ. ச | படிவக்கட்டணம் ரூ. ச |
|---|---|---|
| குப்பை கூளங்களை அகற்றி இரட்டை மாட்டு வண்டில்/உழவு இயந்திரம் பெட்டியுட்பட இரு சக்கர உழவு இயந்திரம் பெட்டியுட்பட வாடகைக்கு விடுதல். | 1000-00 | 500-0 0 |

மேற்படி வைப்பு பணம் கேள்வி படிவக்கட்டணங்கள் செலுத்தப்படுவதன் பேரில் 21-09-95 திகதி 12-30 மணிவரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்படிவக்கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டா. சித்திர கேள்விக்காரர்கள் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டதும் கேள்விவைப்புப்பணம் மீளளிக்கப்படும்.

மேற்படி கட்டணங்கள் இவ்வலுவலகத்தில் பணமாக செலுத்தப்பட வேண்டும். இது சம்பந்தமான ஏனைய விபரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

சி. நடராசா.
செயலாளர்.
நகரசபை சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்.
சாவகச்சேரி
15-09-95
(சி/2290)

# கோட்டரீதியாக இன்று நடக்கும் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், செப். 18

தியாகி திலீபனின் 8ஆவது ஆண்டு நினைவாக கோட்டரீதியாக இன்று நடைபெறும் உண்ணாவிரதங்களில் பங்கு பற்றும் பொது அமைப்புகள்!

**வலிகாமம்**

★ நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் — திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம், யாழ். வெதுப்பக உரிமையாளர் சங்கம், கம்பன் ச. ச. நிலைய பால்பண்ணை, சங்கானை ப. நோ. கூ. சங்கம், வட்டுக்கோட்டை சிற்றூர் மக்கள், வட்டு இந்துக் கல்லூரி, திருநாவுக்கரசு வித்தியாலய மாணவர்கள்.

**தீவகம்**

★ நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் — மணியரசன் குடியிருப்பு மக்கள், வேலணை பிரதேச செயலகப் பணிமனை.

**தென்மராட்சி**

★ மணற்குணாய்ப் பிள்ளையார் கோயில் முன்றலில் — கோயிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாசாலை, தச்சன் தோப்பு ஸ்ரீமுருகன் ச. ச. நிலையம், கோவிலாக்கண்டி ஸ்ரீசரஸ்வதி ச. ச. நிலையம், சாவகச்சேரி நகர் கோவில், குடியிருப்பு, நகுலன் கிராம மக்கள், ப. நோ. கூ. சங்க ஊழியர்கள் கொடிகாமம்நாவலர், கலைமகள் சரஸ்வதி ச. ச. நிலையங்கள், நிதிவாசிகசாலை, பளை இத்தாவில் சிற்றூர் மக்கள், பளை தென்னைவள அபி. கூ. சங்கம்.

**வடமராட்சி**

★ மூத்தவிநாயகர்கோவில் ஆலயமைதானம் — வீரகத்தி விநாயகர். இராசலிங்கம், தர்மகுலசிங்கம், கோபு அறிவகம் உறுப்பினர்கள் மற்றும் பிரதேச மக்கள் இமையாணன் அ. த. க பாடசாலை, கரவெட்டி மேற்கு சிற்றூர் மக்கள்.

**கடற்புலிகள்**

கடற்புலிகள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திலீபன் நினைவு உண்ணாவிரதத்தில் இன்றைய தினம் கலந்து கொள்ளுவோர்.

★ நாகர்கோவிலில்— காலை 7மணிக்கு —பொற்பதி மக்கள்.

**மாணவர் அமைப்பு**

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தியாகதீபம் திலீபனின் ஆண்டு நினைவு அடையாள உண்ணாவிரதம் இன்று நடைபெறும் பாடசாலைகள்.

★ காலை 8 - 30 மணிக்கு நெல்லியடி ம. ம. வி தேவரையாளி இந்துக்கல்லூரி.

(ஓ-எ)

# மாணவர் அறிவியல் கழக இவ்வார வகுப்புகள்

யாழ்ப்பாணம், செப். 18

வழமை போல் இவ் வாரமும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் மாணவர் அறிவியல் கழக அங்கத்தவர்களுக்கான வகுப்புகள் இடம் பெறும்.

இவ்வார வகுப்புகளில் கணித, விஞ்ஞான செய்முறைகளும், கலந்துரையாடல்களும் மற்றும் அறிவியல் ஒளிப்படக் காட்சிகளும் இடம் பெறும்.

இவற்றின் விபரம் வருமாறு;-

**18 - 09 - 95**

பி. ப 3-00 மணியிலிருந்து 4- 30 மணிவரை ஆண்டு 9 - கணித செயல்முறை வகுப்பு ''காரணிப்படுத்தல்'' பி. ப 3- 30 மணியிலிருந்து 5- 00 மணிவரை ஆண்டு 10 விஞ்ஞான செயல்முறை வகுப்பு ஐதரசன் வாயு தயாரிப்பு பி. ப 5 - 00 மணியிலிருந்து 6 - 0 0 மணிவரை ஆங்கில வகுப்பு

**19 - 09 - 95**

பி. ப 3-00 மணியிலிருந்து 4-00 மணிவரை ஆண்டு 8 — கணித செயல்முறை வகுப்பு 'நேர்கோடு ஒன்றின் வரைபு'

**20 . 09 . 95**

பி. ப 4.00 மணியிலிருந்து 5.00 மணிவரை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் பி. ப 5-00 மணியிலிருந்து 6-00 மணிவரை ''அறிவியல் ஒளிப்படக்காட்சி''

**21 . 09 . 95**

பி. ப 3.00 மணியிலிருந்து 4 00 மணிவரை ஆண்டு 10 கணித செயல்முறை வகுப்பு ''எண் அடிகள்'' பி. ப 3.30 மணியிலிருந்து 5.00மணி வரை விஞ்ஞான செயல்முறை வகுப்பு ஆண்டு 8— ''நீர், காற்று, விலங்குகளால் பரம்பலடையும் வித்துகள், பழங்கள் கொண்டுள்ள இசைவாக்கங்களை இனங்காணல்''

**22 . 09 . 95**

பி. ப 3.00 மணியிலிருந்து 4 00 மணிவரை கணித செயன்முறை வகுப்பு ஆண்டு11— ''இருபடிச் சமன்பாடுகள்'' பி. ப 4.00 மணியிலிருந்து 5 00 மணிவரை ஆண்டு11— விஞ்ஞான செயன்முறை வகுப்பு

**23 - 09 - 95**

மு. ப 9 .30 மணியிலிருந்து 11 - 00 மணி வரை ஆண்டு 9— கணித செயன்முறை வகுப்பு ''கோணங்களை அளத்தல்'' பி. ப 4 . 00 மணியிலிருந்து 5.00 மணி வரை ஆண்டு 9 விஞ்ஞான செயன்முறை வகுப்பு ''எளிய மின் சுற்று அமைத்தல்'',

[எ]

# கரவெட்டி பங்குத்தந்தை பம்பாய்க்கு

வடமராட்சி, செப். 18

பம்பாயில் இம்மாதம் நடைபெறவுள்ள தெற்காசிய பிராந்திய பொது நிலையினர் மாநாட்டில் யாழ். மறைமாவட்டப் பிரதிநிதியாக கரவெட்டி பங்குத்தந்தை அருட்திரு. பி. ஜெ. ஜெயரட்ணம் அடிகள் கலந்து கொள்கிறார்.

ஆசிய ஆயர் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இம் மாநாட்டில் இலங்கையின் அனைத்து மறைமாவட்டங்களின் பிரதிநிதிகளாக பத்துப் பேர் பங்குபற்றுகிறார்கள்.

(ஓ-173)

# தென்மராட்சிக்கு வந்த மக்களுக்கு நிவாரணம்

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் வலிகாமம் பகுதியில் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் தங்கியுள்ள மக்களுக்கு ஒருவார கால உலர் உணவுப் பொருள்கள் நிவாரணமாக வழங்கப்படவுள்ளன.

தென்மராட்சிப் பகுதியில் தங்கியுள்ள] உடுவில் பிரதேச செயலக பிரிவைச்சேர்ந்த மயிலணி புன்னாலைக் கட்டுவன், ஏழாலை ஆகிய பகுதி மக்கள் தாம் தங்கியுள்ள பிரிவு கிராம அலுவலர்களிடம் தமது விவரங்களை அறிவிக்குமாறு பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஓ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
293/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## யதார்த்தம் உணரப்படுமா?

கல்வி உயர்கல்வி பிரதி அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபாலா, தமிழர் விவகாரத்தின் யதார்த்தத்தை உணர்ந்து கருத்து வெளியிட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வசமுள்ள பிரதேசங்களில் அரசு தனது நிர்வாக அதிகாரங்களைச் செலுத்த முடியாமல் இருக்கிறது. ஆகையால், நவீன அரசியல் விஞ்ஞானத்தின் பிரகாரம் ஸ்ரீலங்கா அரசு ஒரு பலவீனமான அரசாங்கமே — என்று அவர் எடுத்துக் கூறியுள்ளார்.

1983ஆம் ஆண்டின் கறுப்பு ஜூலையைத் தொடர்ந்து, தெற்கில் வாழ்ந்த தமிழர்கள் அகதிகளாக யாழ்ப்பாணத்துக்குக் கப்பலில் ஏற்றிச் செல்லப்பட்டனர். இது தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தை மறைமுகமாக அங்கீகரித்த சம்பவம்— எனவும் பிரதி அமைச்சர் எடுத்துச் சொல்லியுள்ளார்.

அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தும் விதத்தில், அரசின் தீர்வு யோசனைக்கு ஆதரவு தேடும் நோக்கத்தில், பேராசிரியர் வர்ணபாலா, ஏனைய அரசியல் வாதிகளுக்கு சற்று வித்தியாசமானதாக, இக்கருத்துக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறார்.

இப்போதைய அரசியல் சூழ்நிலையில் இலங்கை பிளவுபடாமல் இருப்பதனைத் தடுக்க வேண்டுமாயின் சிங்களவர் தரப்பு ஆகக் குறைந்தது மூன்று உண்மை நிலைகளைச் சீரணிக்க வேண்டும்; அங்கீகரித்தே ஆக வேண்டும்.

தமிழர்களுக்கு ஒரு தாயகம் உண்டு என்பது முதலாவது. அங்கு இப்போது சிங்களவரின் ஆட்சி பலவீனமாக மட்டுமன்றி செல்லுபடியாகாமலும் உள்ளது என்பது இரண்டாவது. தமிழர்கள் ஒரு தனித் தேசிய இனம் என்றதால் அவர்களுக்கு நிறைவான— முழுமையான — தன்னாட்சி உரிமை வழங்கினால் மட்டுமே பிரச்சினையை இப்போதைக்காவது தீர்த்து வைக்கலாம்.

முதல் இரண்டு அம்சங்களையும் பிரதி அமைச்சர் சிறிதளவேனும் தொட்டுக் காட்டியிருக்கிறார். ஆளும் தரப்பில் உள்ள ஏனையோர் இவற்றையேனும் உணர்ந்து கொள்வார்களா என்பது சந்தேகமே.

அவ்வாறு உணர்ந்திருப்பின்—

தமிழர் பிரச்சினையை நியாயமான முறையில் தீர்க்க வேண்டும் என்ற உண்மையான, நேர்மையான விருப்பம் ஆர்வம் அரசினருக்கு இருந்திருப்பின்—

வடக்கு - கிழக்கில் தமிழ்ப் பொதுமக்களைக் கொன்றொழிக்கும் போரை நடத்த முடிவு செய்திருக்கமாட்டார்கள். தமிழ்ப் பிரதேசங்களில் ஓர் அரசாங்கமாகவே உள்ள விடுதலைப் புலிகளைப் புறக்கணித்துவிட்டு அதிகாரப்பரவலாக்கல் தீர்வை— அரசியல் தீர்வை— கொண்டுவரப் போவதாகக் கூறமாட்டார்கள்.

அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் வருமாயின், முதலில் போரை நிறுத்த வேண்டும். அதற்கடுத்து அரசியல் தீர்வு குறித்து விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும்.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதம்; அதனை ஒழிக்கக் கூடிய தீர்வே தேவை என்று கூறும் அமைச்சர் அனுருத்த போன்றோர் இதற்கு அனுமதிப்பார்களா?

# எமது பிரதேசங்களைப் பிடிப்பதால் எதிரியின் நோக்கம் நிறைவேறி விடாது

### நல்லூரில் உண்ணாவிரத நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம் செப் 18

எமது பிரதேசங்களைப் பிடிப்பதன் மூலமோ தனது பகுதிகளை விஸ்தரிப்பதன் மூலமோ எதிரி தனது நோக்கங்களை நிறைவேற்றி விட முடியாது.

தியாகி திலீபனின் எட்டாவது நினைவு நிகழ்வுகளின் முதல் நாள் உண்ணாவிரதத்தை நல்லூரில் தொடக்கி வைத்துப் பேசிய யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு சி இளம்பரிதி இவ்வாறு கூறினர்.

வலிகாமம் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. எழிலன் தலைமையில் நடைபெற்ற இன்றைய நிகழ்வில் திரு. இளம்பரிதி மேலும் பேசும் போது கூறியதாவது.

எதிரி தனது முழுப் பலத்தையும் பிரயோகித்து எமது மண்ணில் நெருக்கடிகளையும் அழிவுகளையும் உண்டுபண்ண முனைகிறான். இந்த நிலையில் எமது லட்சியத்தை சுதந்திரத்தை எட்டுவதற்கான வழிகளைத் தலைவர் முனைப்புடன் செயற்படுத்தத் தயாராக உள்ளார்.

உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டபோது திலீபன் யாழ். கோட்டையில் எமது கொடி பறக்கவேண்டும் என்று கூறினான் அடக்குமுறையின்சின்னமான அந்தக் கோட்டை இன்று நொருக்கப்பட்டு விட்டது.

மக்களின் எண்ணங்கள் உணர்வுகள் வலிமையுடையதாக வேண்டும். அப்போது தான் எதிரியின் முழுப் பலத்தையும் முறியடிக்க முடியும். இதனை உணர்ந்து செயற்படுவோம். திலீபனின் கனவு நனவாகும் அவரின் ஆன்மா அப்போது தான் திருப்தியடையும் இவ்வாறு அவர் கூறினர்.

திரு. எழிலன் தனது தலைமையுரையில் கூறியதாவது —

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து ஒரு இலட்சியத்திற்காகத் தன்னை அர்ப்பணித்தவர் தியாகி திலீபன் இந்திய ஏகாதிபத்தியத்தின் முகத்திரையைக் கிழித்து அவர்களுக்கு இணையான பலத்துடன் போராடும் உணர்வை மக்களுக்கு ஊட்டிய அவரின் நினைவுகள் எமது எதிர்கால வெற்றிக்கு உறுதுணையாகும். இவ்வாறு அவர் கூறினார். [ஓ-111]

# ஸ்ரீலங்காவில் பௌத்தம் சீரழிக்கப்படுகின்றது

### ஜப்பானிய பிக்கு கூறுகின்றார்

யாழ்ப்பாணம், செப். 18

பௌத்த தர்மம் ஸ்ரீலங்காவில் பாதுகாக்கப்படவில்லை. மாறாக சீரழிக்கப்படுகிறது.

ஜப்பானிய பௌத்த மதகுரு கலாநிதி ஜீன் அகோக்கி இவ்வாறு கூறியுள்ளார்.

அண்மையில் ஸ்ரீலங்கா வந்த இவர் இங்கு பௌத்த மதம் கடைப்பிடிக்கப்படுவது தொடர்பான முழு அம்சங்களையும் நேரில் கண்டறிந்தார்.

"ஸ்ரீலங்காவில் பௌத்த மதம் உள்ளது. ஆனால் அதை பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் படவில்லை. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா காலத்தில் பௌத்தமத வளர்ச்சிக்காக வழங்கப்பட்ட 30 லட்சம் ரூபா பணத்துக்கு என்ன நடந்தது என்பது குறித்து எனக்கு எதுவும் தெரியாது". என்றும் அவர் தெரிவித்தார். (உ-3)

### தற்போதைய நிலைகளிலிருந்து

# உடனே முன்னேறும் திட்டம் படைகளுக்கு கிடையாதாம்

கொழும்பு, செப். 18

குடாநாட்டில் தற்போது இராணுவம் முன்னேறிய நிலைகளில் இருந்து புதிய எல்லைகளை நோக்கி உடனடியாக முன்னேறும் எண்ணம் படையினருக்கு இல்லை.

இராணுவப் பேச்சாளர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது

கடந்த சில நாட்களாக படையினர் மேற்கொண்டு வந்த இராணுவ நடவடிக்கை குறித்து தகவல் வெளியிடுகையிலேயே ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேற்றிரவு இவ்வாறு தெரிவித்தது,

மீட்கப்பட்ட பகுதிகளுக்கு நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் அனுப்பப்பட்டுள்ளனர் —

அவர்கள் தற்போ[illegible] தமது நிலைகளைப் பல[illegible]படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர் —

பலாலியைச் சுற்றியுள்ள விடுதலைப் புலிகளின் பீரங்கி நிலைகளை அழிப்பதே இந்த இராணுவ நடவடிக்கையின் நோக்கமாக இருந்தது—

— இவ்வாறு அந்த இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்ததாக அறிவிக்கப் பட்டது. [உ-3]

# ஆத்ம ஜோதியின் மறைவு இந்துக்களுக்கு பேரிழப்பு

### அஞ்சலிக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், செப். 18

இந்துக்களுக்கு எதிராக மேற்கொள்ளும் அரசின் அநீதிகளை வெளியுலகிற்கு எடுத்துச் சொல்லப் பயணம் செய்த வேளையில் ஆத்மஜோதி ஐயா அமரரான செய்தி எம் உள்ளத்தை உருக்குகிறது. யுத்தத்தில் இந்து ஆலயங்கள் திட்டமிட்டுத் தாக்கப்படுவதையும், இந்துக்கள் துன்புறுத்தப்படுவதையும் ஸ்தாபன ரீதியாக எதிர்க்க வேண்டும் என்ற நோக்கில் இந்து சமயப்பேரவை எனும் இந்துக்களின் கூட்டமைப்பை நிறுவி அதற்குத் தலைமை வகித்த பெருமை ஆத்த ஜோதி முத்தையாவையே சாரும். அவரின் மறைவு இந்துக்களுக்கு பேரிழப்பாகும்.

இவ்வாறு அண்மையில் கனடாவில் அமரரான இந்து சமயப் பேரவைத் தலைவர் ஆத்மஜோதி திரு. நா. முத்தையாவின் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய நல்லை ஆதீன குரு மகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் குறிப்பிட்டார்.

மேற்படி அஞ்சலிக் கூட்டம் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் இந்துசமயப் பேரவை பதில் தலைவர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற போது தொடர்ந்து பேசிய சுவாமிகள் கூறியதாவது;

இந்நாட்டில் இருந்து யுத்தம் காரணமாக வெளியேறும் மக்கள் எமது மொழி, மத, கலாசாரங்களை மறந்திடாது வாழ வேண்டும் என்பதை அடிக்கடி வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் போது அங்கு வாழும் நமது மக்களுக்கு வலியுறுத்தி எடுத்துக்கூறி வந்தார் ஆத்ம ஜோதி.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்பதே ஆத்மஜோதியின் பெருவிருப்பு. அதனை நிறைவேற்ற அதற்காகச் செயற்படும் இந்து சமயப் பேரவையின் செயற்பாடுகளுக்கு ஆதரவு நல்குவதே நாம் அன்னாருக்குச் செலுத்தும் அஞ்சலி ஆகும் என்றார்.

அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம், மில்க்வைற் அதிபர் க. கனகராசா, சாவகச்சேரி பிரதேச செயலாளர் திரு. பு. [illegible] [illegible] உட்படப் பலர் அங்கு உரையாற்றினர். (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதாந்த உதவிப்பண கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம் செப். 18

புங்குடுதீவு, வேலணை, நெடுந்தீவு, மண்டைதீவு பகுதிகளைச் சேர்ந்த, பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவு பெறுவோருக்கான ஆகஸ்ட் மாதக் கொடுப்பனவுகளும், புற்றுநோய், தொழுநோயாளருக்கான ஓகஸ்ட் மாதக் கொடுப்பனவுகளும் யாழ். மத்திய தபாலகத்தில் இயங்கும் வேலணை, புங்குடுதீவு தபாலகங்களில் வழங்கப்படுகின்றன.

கொற்பலி அகதி முகாமில் உள்ளோருக்கான மேற்படி கொடுப்பனவுகள் விடத்தற்பளை உபதபாலகத்தில் வழங்கப்படுகின்றன. (எ)

## ஜப்பானில் சூறாவளி

டோக்கியோ, செப். 18

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் பெரும் புயல் காற்று வீசியிருக்கிறது. இதன் காரணமாக விமான, கடல், ரயில் போக்குவரத்துச் சேவைகள் சீர்குலைந்தன; வீடுகளும் சேதம் அடைந்திருக்கின்றன. 14 பேர் காயமடைந்தனர்.

ஐம்பது வருட காலத்தில் ஜப்பானில் ஏற்பட்ட மிக மோசமான சூறாவளி இது என்று கருதப்படுகிறது. (க)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 18

யாழ். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், முன்னாள் பிரதிக் கல்விப்பணிப்பாளர் அமரர் இ. சிவானந்தன் நினைவாக 'தமிழர் யாழியல்' எனும் ஆய்வு நூலை வெளியிடவுள்ளது.

### தெரிவுக்குழுவிடம்

# யோசனை சமர்ப்பிப்பது தாமதமாவதால் அதிருப்தி

கொழும்பு, செப். 18

தனது தீர்வுத் திட்ட யோசனைகளை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிப்பதை அரசு தாமதித்து வருவது குறித்து ஈ.பி.டி.பி அதிருப்தி தெரிவித்துள்ளது.

தீர்வுத் திட்டம் குறித்து தமிழ் மக்கள் கொண்டுள்ள எதிர்பார்ப்புகளை அரசு தனது தாமதம் மூலம் சிதைத்து விட்டது என அக்கட்சிப் பிரமுகர் ஒருவர் குறிப்பிட்டார்.

இத்தகைய தாமதம் குறித்து 'புளொட்' பேச்சாளரும் கவலை வெளியிட்டார். ஆனால் அநாவசிய அவசரமும் தேவையற்றது என்றார் அவர்.

இத்தாமதம் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி எவ்வித கருத்தும் வெளியிட விரும்பவில்லை. ஆனால் இந்த விடயம் குறித்து தாங்கள் விரைவில் ஜனாதிபதியுடன் கலந்துரையாட இருப்பதாக அக்கட்சியின் பிரமுகர் வி. ஆனந்தசங்கரி தெரிவித்தார். [உ-6]

# சவுக்கம் சருகில் இருந்து சிறந்த சேதனப் பசளை

### பரீட்சார்த்த முயற்சி வெற்றி

யாழ்ப்பாணம், செப். 18

உக்கிய சவுக்கம் சருகுகளில் இருந்து தயாரிக்கப்பட்ட சேதனப் பசளையை பயன்படுத்தி மரக்கறிப் பயிர்ச் செய்கைபண்ணும் பரீட்சார்த்த முயற்சி வெற்றி கண்டுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பேண் நிறுவனம் மணற்காட்டில் இந்தப் பரீட்சார்த்த முயற்சியை மேற்கொண்டது.

உக்கிய சவுக்கம் சருகுப் பசளையைப் பாவித்து டுமாய் பூசணி, பயற்றை, வெண்டி போன்ற பயிர்கள் செய்கை பண்ணப்பட்டன. அவை சிறந்த பயனைத் தந்துள்ளன.

அரசின் உரவகைகள் மீதான தடையை முறியடிக்கும்நடவடிக்கைகளில்ஈடுபட்டு வரும் விவசாய சூழல் பாதுகாப்பு பகுதி சவுக்கம் சருகுகளில் உள்ள பெறுமானங்கள் குறித்து தற்போது ஆய்வு செய்து வருகின்றது. (ஐ)

## தியாகத்தின் நாயகன்

தியாகத்தின் சிறப்பதனை உணரவைத்த
திலீபனது மகிமையினை அறியவேண்டும்
தயாராக இருந்திடுவீர் இளையோரே
தமிழீழம் காண்பதென்ற முடிவைப் பற்றி
நியாயங்கள் பலவற்றை நினைவுறுத்தி
நீண்டபல நாட்களாக நோன்பிருந்து
தியாகத்தின் நாயகனாய் உலகுபோற்ற
தீபமதாய் உயர்ந்தவனே திலீபனென்போம்!

— சித்துூர்ரத்தினம்.

# அகதிகளுக்கான ஐ.நாவின் அதிகாரி இன்று வருகை

யாழ்ப்பாணம், செப். 18

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் ஜெனிவா தலைமையக அதிகாரி ஒருவர் இன்று யாழ்ப்பாணம் வர விருக்கிறார்.

குடாநாட்டு உணவு நிலைமை குறித்தும்—

தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்று திரும்பியவர்களுக்கு சுய தொழில் வாய்ப்பு அளிக்கும் திட்டம் குறித்தும்—

தமது யாழ். அலுவலகத்தை விஸ்தரிப்பது குறித்தும்—

இங்கு தங்கியிருக்கும் இரு நாட்களிலும் அவர் ஆராய்வார்.

மடுவில் உள்ள அகதிகளுக்கான ஐ. நா. அமைப்பின் அலுவலக அதிகாரி ஒருவரும் இவருடன் வருகின்றார்.

அதேவேளை—

அண்மையில் யாழ்ப்பாணம் வந்து இங்குள்ள உணவு நிலைமை குறித்து ஐ. நா. சபைக்கு அறிக்கை சமர்ப்பித்த ஐ. நா. அபிவிருத்தி திட்ட அதிகாரியான டொனால்ட் ஹட்சனும் இன்று யாழ்ப்பாணம் வரத் திட்டமிட்டிருந்தாராயினும்—

மன்னார், மடுப்பகுதிகளுக்கு அவர் இன்று விஜயம் செய்வதால் யாழ்ப்பாண விஜயத்தை பின் போட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இன்று யாழ்ப்பாணம் வரத் திட்டமிட்டிருந்த— ஐ. நா. வின் மற்றொரு அமைப்பான ஐ. நா. சிறுவர் பாதுகாப்பு (யுனிசெவ்) அமைப்பின்— திட்ட அதிகாரிகள் இன்று வருவார்களா என்பது குறித்து உறுதியான தகவல் எதுவும் நேற்று மாலை வரை யாழ்ப்பாணத்துக்கு கிடைக்கவில்லை. (உ-3)

# புலிகளுக்கு உதவியவர் கைதாம்!

சென்னை, செப். 18

கடந்த மாதம் வேலூர் கோட்டை சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்ற விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபருக்கு அடைக்கலம் அளித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பி. அருச்சுனநம்பி என்பவரை கோயம்புத்தூரில் வைத்து பொலிஸார் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

இவரிடம் உதவி பெற்றதாகக் கூறப்படும் பவக்குமார் என்ற புலிகள் இயக்க சந்தேக நபரை கடந்த வெள்ளியன்று பொலீஸார் கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

# பலாலிக்கு பலவந்தமாக அனுப்பப்படும் பொலீஸார்

யாழ்ப்பாணம், செப். 18

தெற்கில் பணிபுரியும் தமிழ் பொலீஸார் பலர் கட்டாயப்படுத்தி பலாலிக்கு சேவைக்கு அனுப்பப்படுவதாகத் தெரிய வருகிறது.

முன்னர் யாழ். மாவட்டத்தில் பணியாற்றி, 90 ஆம் ஆண்டுக்கு பின்னர் தெற்கேயும், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலைப் பகுதிகளிலும் பணியாற்றி வரும் நூறுக்கும் மேற்பட்ட தமிழ்ப் பொலீஸார் பலாலிப் பகுதியில் இலவாலை, மாதகல், காங்கேசன்துறை பொலீஸ் நிலையங்களுக்கு கட்டாய இடமாற்றம் செய்யப்படுவதாக கொழும்பு தகவல் ஒன்று தெரிவித்தது. (உ-3)

## இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு

# தேசிய அரசு அமைக்க கோருகின்றார் சிறிமானி

கொழும்பு, செப். 18

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கவேண்டும்.

— இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் நெடுஞ்சாலைகள் அமைச்சர் திருமதி சிறிமானி அத்துலத்முதலி கோரியிருக்கிறார்.

தமது அறிக்கை ஒன்றிலேயே அவர் இக்கோரிக்கையை வெளியிட்டிருக்கின்றார்.

ஆட்சியிலிருக்கும் பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் சிறிமானியின் கட்சியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் (சிறிமானிபிரிவு) இடம் வகிக்கின்றது.

அதன் தலைவர் சிறிமானி தேசிய அரசு அமைக்கக் கோரியிருப்பது ஆளும் முன்னணிக்குள் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாட்டையே காட்டுவதாக அவதானிகள் குறிப்பிட்டனர். (உ-3)

# தீர்வு யோசனைகளை ஜே. வி. பி. எதிர்க்கும்

## பொதுச் செயலர் அறிவிப்பு

கொழும்பு, செப். 18

அரசு முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளை எதிர்க்கப் போவதாக ஜனதா விமுக்திப் பெரமுன (ஜே. வி. பி) அறிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் ஜே. வி. பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இதனை அறிவித்தார்.

அரசின் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் நாட்டை வேறு ஆட்சி முறையில் அமைந்த பிராந்தியங்களின் ஒன்றியமாக மாற்றுவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன.

இது உத்தேச பிராந்தியங்கள் விரும்பினால் பிரிந்து போவதற்கான சட்ட ரீதியான அடிப்படையை வழங்கி விடும்.

தனது அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை எவ்வாறாயினும் திணித்து நடைமுறைப்படுத்துவதற்கு அரசு முயல்கிறது.

இது நாட்டின் ஜனநாயகத்திற்கே அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

அரசின் யோசனைகள் தற்போதைய இன நெருக்கடியை மேலும் மோசமாக்கவே செய்யும்.

காணி விவகாரங்கள் மற்றும் ஆறுகளின் நீரைபகிர்வது தொடர்பாகவும் இந்த யோசனைகளால், பிராந்தியங்களிடையே சர்ச்சைகளே தோன்றும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (எ)

# ஆயுதங்களில் பெரும் பகுதி வந்து சேர்ந்துவிட்டதாம்

ஸ்ரீலங்கா அரசினால் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்களில் பெரும்பகுதி தற்போது வந்து சேர்ந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு செய்திகள் தெரிவிப்பதாக 'ராவய' தெரிவிக்கிறது.

வந்து சேர்ந்துள்ள ஆயுதங்களில் ஏவுகணை எதிர்ப்பு உபகரணங்கள் அடங்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. இவ்வாயுதங்களின் பெறுமதி சுமார் 500 கோடிக்கும் மேலானது எனவும்—

அண்மையில் ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்ட ஆயுதக் கொள்வனவில் இதுவே மிகப்பெரியது எனவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் இஸ்ரேலியத் தயாரிப்பான கே. ஷிர் ரக நவீன தாக்குதல் ஜெட் விமானங்கள் ஐந்து வாங்குவது பற்றியும் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் —

விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்துள்ள ஆயுதங்களில் சுமார் 5ஆயிரம் அடி தூரத்திலுள்ள இலக்கைத் தாக்கவல்ல 'றோவன்' ரகத்தைச் சேர்ந்தஏவுகணைகள் அடங்கியுள்ளன. என அரச புலனாய்வுத் துறையினரால் நம்பப்படுகிறதாம். (ஒ-10)

## கிராம சேவையாளருக்கு அழைப்பு

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சகல கிராம சேவையாளர்களையும் இன்று காலை 10 மணிக்கு பிரதேச செயலர் அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் திரு. ஆ. மகாலிங்கம் கேட்டுள்ளார்.

தற்போது இடம்பெறும் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்து இச்சந்திப்பில் ஆராயப்படவிருப்பதாகத் தெரிய வந்தது. (உ-3)

## ஆயுத விற்பனைக்காகவே "த ஐலண்ட்" இனவாதம்!

கொழும்பு, செப். 18

இலங்கையில் உள்ள சில பிரபல பத்திரிகைகளின் உரிமையாளர்கள் ஆயுத வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர். தமது ஆயுத வர்த்தகம் சிறப்பாக நடைபெறுவதற்கு நாட்டில் யுத்தம் தொடரவேண்டும் என்பதால் தமது பத்திரிகைகளை இனவாதம் கக்கும் விதத்தில் அவர்கள் வெளியிட்டு வருகின்றனர்.

குறிப்பாக "த ஐலண்ட்" "திவயின" ஆகிய பத்திரிகைகளை வெளியிடும் உபாலி குறூப் நிறுவனத்துக்கு எதிராக இத்தகைய குற்றச்சாட்டு எழுப்பப்பட்டிருக்கின்றது.

அரசின் தீர்வுத் திட்ட யோசனைகளுக்கு எதிரான கடும் பிரசாரத்தை இந்நிறுவனப் பத்திரிகைகளே முன்னின்று நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிறுவனத்தின் தலைவரும், பிரதமர் சிறிமாவோவின் சகோதரரும், ஜனாதிபதியின் மாமனாருமான டாக்டர் சீவலி ரத்வத்தை வெளிநாட்டு ஆயுத வர்த்தகர்களுக்கு அண்மையில் பெருவிருந்து ஒன்றை அளித்ததாக அரச தரப்பு எம். பிக்கள் குற்றம் சுமத்தினர்.

இலங்கையில் உள்ள பத்திரிகை நிறுவன உரிமையாளர்கள் பத்திரிகைகளைப் பிரசுரம் செய்வது புகழுக்காகவே. அவர்களிடமுள்ளது இரத்தம் தோய்ந்த பணமே— என்றும் தெற்கில் குற்றம் சமத்தப்படுகின்றது. (உ-6)

## வடக்கிற்கான...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தற்சமயம் இக்கப்பல் மாவை ஏற்றிக்கொண்டு கொழும்பு செல்லவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மா ஏற்றிவரும் பணிக்காக யாழ். செயலகத்தால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட இக்கப்பல் ஏன் கொழும்புக்குச் செல்கிறது என்பது குறித்து தகவல் எதுவும் இங்கு கிடைக்கவில்லை. (உ-3)

## ஐ. நா. டாக்டர்கள்..,

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யாக ஜெனிவாவுடன் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைத்தொடர்பு கருவிகளை இணைப்பதற்கு அனுமதி தருமாறு ஐ.நா. இலங்கை அரசாங்கத்திடம் கேட்டிருந்தது.

இதற்கான அனுமதியை வழங்காமல் அரசு இழுத்தடித்து வந்தது.

கடந்த வாரம் அரசின் அனுமதி கிடைத்ததையடுத்து —

டாக்டர்களை நியமிக்கும் வேலைகளை ஐ. நா. அபிவிருத்தித்திட்ட அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர். (உ-3)

## வன்னியிலும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீடுகளுக்கு முன்னாலும் அமைக்கப்பட்ட சிறு பந்தல்களில் வைக்கப்பட்டுள்ள திலீபனின் திருவுருவப் படங்களுக்கு மக்கள் மலரஞ்சலி, தீபாஞ்சலி செலுத்தினர்.

அச்சுவேலி, ஆவரங்கால் புத்தூர், சிறுப்பிட்டி பகுதிகளில் ஷெல் தாக்குதல்கள் நடைபெற்ற போதிலும் திலீபன் நினைவு நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் அறிவிக்கிறார்.

வன்னிப் பெருநிலப் பகுதியிலும் திலீபன் அஞ்சலி நிகழ்ச்சிகள் வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அமைக்கப்பட்ட பிரதான பந்தல்களிலும் ஏனைய பந்தல்களிலும் மக்கள் உண்ணாவிரதம் அனுஷ்டித்து வருகின்றனர்.

பொது இடங்கள், அரச, தனியார் துறை நிறுவனங்கள், வீடுகள் முன்னால் மேடைகள் அமைக்கப்பட்டு தியாகி திலீபனின் திருவுருவப் படத்திற்கு மக்கள் அஞ்சலி செலுத்துகின்றனர். [அ-3-11-173-13]

## யாழ். செயலகம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிகள் மூலம் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வந்தன.

ஆனால் கடந்த ஜனவரி மாதம் முதல் கொழும்பில் இருந்து யாழ் மாவட்டத்தில் உள்ள திணைக்களங்களுக்கு தேவையான பொருள்கள் எடுத்து வரும் செயற்பாடு யாழ். அரச அதிபரால் அவரின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டது.

இதன் பின்னர் வருட ஆரம்பத்தில் ஓரளவு பொருள்கள் திணைக்களங்களால் எடுத்து வரப்பட்ட போதும் —

கடந்த ஐந்து மாதங்களாக பொருள்கள் எடுத்துவர செயலகம் உரிய ஏற்பாடுகளை செய்து தரவில்லை என்று திணைக்கள அதிகாரிகள் பலரும் தெரிவித்தனர்.

அதே வேளை —

'குமண' கப்பலில் பொருள்கள் ஏற்றுவதற்கான கப்பல் கட்டணத்தை யாழ், செயலகத்தில் செலுத்தி கொழும்பில் பொருள்களை கொள்வனவு செய்து வைத்திருந்தும் அவற்றை எடுத்துவர கப்பல் வசதி யாழ். செயலகத்தால் செய்து தரப்படவில்லை என்று தனியார் பலரும் குறை கூறியுள்ளனர். (உ-3)

## உலக சைவ பேரவையின் மாநாடு

கொழும்பு செப். 18

உலக சைவப் பேரவையின் 4 ஆவது மாநாடு அண்மையில் வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற்றது.

சைவ சமூகம் சார்ந்த மிக முக்கிய விடயங்கள் பற்றி அங்கு கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவது என்ற போர்வையில் சைவ சமயிகளை மதமாற்றம் செய்வது பற்றியும் அங்கு எடுத்துக் கூறப்பட்டது.

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், செப். 18

யாழ்ப்பாணத்தில் தவறுதலாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான லெப்டினன்ட் ஆனந்தி (சாந்தினி குமாரசுவாமி — முள்ளிவாய்க்கால்) வீரமரணமடைந்தார். [உ-3]

## புதிய வீடுகள்

நீர்வேலி பரலோக மாதா தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த குடும்பங்களுக்கு யாழ். மனித முன்னேற்ற நடுநிலையம் புதிய வீடுகளை அமைத்து வழங்கியுள்ளது.

அண்மைக்கால இராணுவ நடவடிக்கையினால் 50 குடும்பங்கள் இடம்பெயர்ந்து மேற்படி தேவாலயத்தில் தங்கியிருந்தன. [ஒ-173]

## பலாலியிலிருந்து...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றுக் காலை 7-15 மணி முதல் சுமார் அரைமணி நேரம் வல்லைவெளிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் இடம்பெற்றது.

ஷெல் தாக்குதல்கள் தொடர்வதால் இடம்பெயர்ந்த மக்கள் தமது இடங்களுக்குத் திரும்ப முடியாது கஷ்டப்படுவதையும் காணமுடிந்தது. [உ-13-11-173]


# மரண அறிவித்தல்

## கருப்பையா மாரிமுத்து

(நாதஸ்வர வித்துவான்)

நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட நாதஸ்வர வித்துவான் கருப்பையா மாரிமுத்து அவர்கள் 15-09-1995 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16-09-1995 சனிக்கிழமை நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்

138/7, கோவில் வீதி,
நல்லூர்.

[38584]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெடினால் யாழ்ப்பாணம் தாவடி வீதியிலுள்ள அச்சகத்தில் 18 - 09 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org